**காலநிலை மாற்றத்திற்கெதிரே போராடுவதற்கு நீங்கள் உதவலாம்**

ஒன்டாரியோ காலநிலை மாற்றத்தை போராடவல்லது – அதற்கு நீங்களும் உதவலாம்! நாங்கள் எல்லோரும் செயற்படுத்துவற்கென ஒரு பங்குள்ளது; அத்துடன் நாமொவ்வொருவரும் காலநிலை மாற்றத்திற்கெதிரே செயற்பட்டால், அனைவருக்கும் மேம்பாடான ஒரு சூழ்நிலையை அமைக்க உதவலாம்.

சில எளிய தேர்வுகளுடன் நாம் ஆரம்பிக்கலாம்.

## சுற்றாடலிற்குரிய உத்திகள்

எளிய செயல்கள் ஒரு நன்பகமான சூழ்நிலையை அமைப்பதுடன் உங்களுடைய சேமிப்புகளையும் அதிகரிக்கும். சில சுலபமான உத்திகளுக்கும் சிந்தனைகளுக்கும் தொடர்ந்து படியுங்கள்.

- உங்கள் வாகனத்தை முறையாக பராமரிப்பதன் மூலம் சரியாக பராமரிக்கப்படாதவொரு வாகனத்தால் வெளியிடப்படும் மாசுக்களினளவை 10 மடங்கினால் குறைக்கலாம்.

- தினமும் 10 நிமிடங்களுக்கு உங்கள் வாகனத்தை நிறுத்திய நிலையில் இயங்கவிடுவது ஒரு வருடத்திற்கு சராசரியாக 100 லீற்றர் எரிவாயுவை பயன்படுத்துகின்றது. உங்கள் இயந்திரத்தை அனைத்துவிடுவது எரிபொருளை சேமிப்பதுடன் பச்சை வீட்டு வாயுக்களின் வெளியீட்டையும் குறைக்கின்றது.

- உங்கள் காற்றுப்பதனாக்கியின் வடிகட்டுந்தாள்களை ஒழுங்காக சுத்தம்செய்வது சக்தியை சேமிக்கின்றது.

- குளிர்க்காலத்தில் உங்கள் வெப்பசீர்நிலைக்கருவியை மூன்று பாகை செல்சியஸ் இனால் இரவில் குறைப்பது உங்கள் சக்தி பயன்பாட்டை ஆறு சதவிகிதத்தால் குறைப்பதுடன் உங்கள் சக்தி செலவுகளையும் தாழ்த்தும்.

- அறையை விட்டு வெளியேறும்போது விளக்குகளை அனைப்பது சக்தியை சேமிக்கின்றது.

- உங்கள் ஆடைகளை குளிர்நீரில் சலவைசெய்வது வெப்பமேற்றற் சக்தியை 85-90 சதவிகிதத்தால் குறைக்கின்றது.

- துவைக்கப்பட்ட ஆடைகளில் 50 சதவிகிதத்தினை வெளியே உலர்த்துவதன் மூலம் ஒரு வருடத்தில் உங்கள் மின் செலவுகளில் சுமார் $60 ஐ சேமிக்கக்கூடியதுடன், வளி மாசுக்களையும் பச்சை வீட்டு வாயுக்களையும் குறைப்பதற்கு ஒரு அர்த்தமுள்ள பங்கை வகித்திருப்பீர்கள்.

- செறிவான கிளர் ஒளிர்வு மின்குமிழ்களிற்கு மாற்றுவது, சாதாரண மின்குமிழ்களைவிட 75 சதவிகிதம் குறைவான சக்தியை பயன்படுத்துகின்றது.

- ஒரு மடிக்கணணியை வாங்குவதன் அர்த்தம், ஒரு மேசைக்கணணியைவிட 80 சதவிகிதம் குறைவான சக்தியை பயன்படுத்துவதாகும்.

- உள்ளூரில் பயிர்செய்யப்பட்ட பழங்களையும் காய்கறிகளையும் வாங்குதல் உங்கள் உள்ளூர் பொருளாதாரத்தை ஆதரிப்பதுடன் சுற்றாடலையும் காப்பாற்றுகின்றது.

- புல் வெட்டுவதற்கு தள்ளும் புல்வெட்டியை உபயோகிப்பது உங்களுக்கும், உங்கள் புல்தரையிற்கும், சுற்றாடலிற்கும் சாதகமானது. பழைய எரிவாயு புல்வெட்டியை ஒரு மணித்தியாலத்திற்கு உபயோகிப்பது உங்கள் வாகனத்தை 500 கிலோமீற்றர்கள் ஓட்டுவதனால் ஏற்படுத்தப்படும் மாசுக்களிற்கு ஒத்த அளவு மாசுக்களை உண்டாக்கக்கூடியது.

சுற்றாடலிற்கு உதவக்கூடியனவும் உங்களிற்கு பணச்சேமிப்பை ஏற்படுத்துவதுமான நீங்கள் தகுதிபெறக் கூடிய சில சுற்றாடல் வெகுமதிகள் இங்குள்ளன.

## சுற்றாடல் வெகுமதிகள்

### இடத்திற்கிடம் செல்லுதல்

#### கலப்பினை (Hybrid) வாகனம்

கலப்பினை வாகனம் வாங்குவதற்கு $2,000 தள்ளுபடியை பெறுங்கள்! இங்கே செல்லுங்கள்: http://www.rev.gov.on.ca/english/guides/rst/702.html

#### பேருந்து அல்லது சுரங்கப்பாதையை உபயோகியுங்கள்

பொது போக்குவரத்திற்கு மாறுவதன் மூலம் $150 வரையான வரி தள்ளுபடித்தொகையை பெறுங்கள். இங்கே செல்லுங்கள்: http://www.cra-arc.gc.ca/whtsnw/tms/trnst-eng.html

#### இருசக்கரவண்டியை செலுத்துதல் உங்களையும் சுற்றாடலையும் நல்நிலையில் பேணுகின்றது!

புதிய சக்கரவண்டியையோ சக்கரவண்டியிற்குரிய சாதனங்களையோ வாங்கும்பொழுது, நீங்கள் சில்லறை விற்பனை வரியை (Retail Sales Tax) கட்டவேண்டிய அவசியமில்லாதிருக்கக்கூடும். இங்கே செல்லுங்கள்: http://www.rev.gov.on.ca/english/notices/rst/61.html

### உங்கள் இல்லத்தை சுற்றாடலிற்கு சாதகமானதாக்குங்கள்

#### இல்ல சக்தி இயங்குதிறன் மற்றும் மாற்றியமைப்பு திட்டம் (Home Energy Audit and Retrofits Program)

இல்ல சக்தி இயங்குதிறனிற்கு (Home Energy Audit) உட்பட்டு இல்ல சக்தி மாற்றியமைப்பு திட்டத்தின் (Home Energy Retrofit Program) கீழ் மாற்றங்களை மேற்கொண்டால் நீங்கள் இல்ல மேம்பாட்டு செலவுகளிற்காக $10,000 வரை பெற தகுதியடையக்கூடும். சீர்படுத்தப்பட்ட யன்னல்கள், கதவுகள், வெப்பக்காப்பு (insulation), காற்றுப்பதனாக்கிகள், வளி இணைப்புகள், வெப்ப உலைகள், நீர் சூடேற்றிகள் மற்றும் வேறிற்கும் மானியங்கள் கிடைக்கக்கூடியதாகவுள்ளன. இங்கே செல்லுங்கள்: http://www.homeenergyontario.ca/pdfs/retrofit_consolidated_list_english.pdf

#### சக்தி பாவனை

உங்கள் சக்தி பயன்பாட்டை குறைத்துதவி, பீக்சேவர் (Peaksaver) திட்டத்தில் சேர்வதற்கு $25 பெறுங்கள். இங்கே செல்லுங்கள்: http://www.everykilowattcounts.com/residential/peaksaver/

#### ஒளியேற்றல் பொருட்கள்

மின்குமிழ்கள், அலங்கார ஒளி நாண்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய தகுதிபெற்ற ENERGY STAR® ஒளியேற்றல் பொருட்களை விலைக்கு வாங்கும்பொழுது,
நீங்கள் சில்லறை விற்பனை வரியை (Retail Sales Tax) கட்டவேண்டிய அவசியமில்லாதிருக்கக்கூடும். இங்கே செல்லுங்கள்: http://www.rev.gov.on.ca/english/notices/rst/68.html

**குளிர்மையாக இருங்கள்**

பாவனையிலுள்ள மத்திய காற்றுப்பதனாக்கி (CAC) ஒன்றினை ENERGY STAR தகுதிபெற்ற CAC தொகுதியொன்றுடன் மாற்றீடு செய்யும்பொழுது $250 தள்ளுபடியை பெறுங்கள். இங்கே செல்லுங்கள்: http://www.everykilowattcounts.com/residential/coolsavings/

மேலதிக உத்திகளிற்கும் வெகுமதிகளிற்கும், சுற்றாடலில் நீங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தை குறைப்பதற்கான இணைய கணிப்பான் கருவியிற்கும் இங்கே செல்லுங்கள்: www.ontario.ca/additup.